**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**

**முன்னிலை - திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2025ம் ஆண்டு ஏப்ரல் 05ம் நாள் சனிக்கிழமை**

**இடைக்கால மனு எண்.2/2024**

**இன்**

**அசல் வழக்கு எண்.54/2020**

ஈஸ்வரி ...... மனுதாரர்/ வாதி

**/ எதிர் /**

1. ஜோதிராம்

2.ராஜா ...... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 25.03.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. மனுதாரர் தரப்பில் கட்டளை 6, விதி 17, 18 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதியளித்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:**

மனுதாரின் தந்தையான மீனாட்சிசுந்தரம் என்பவரும், பிரதிவாதிகளின் தந்தையான கருப்பையா என்பவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றும், மனுதாரார் பிறந்த 3 மாத காலத்திலேயே அவரது தந்தையான மீனாட்சிசுந்தரம் இறந்துவிட்டார் என்றும், மனுதாரார் மட்டுமே வாரிசு என்றும், கருப்பையா என்பவரின் ஆண் வாரிசுகள் தான் பிரதிவாதிகள் என்றும், தாவா வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கடந்த 07.06.1985ம் தேதிய பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக பிரதிவாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் உடன்பிறந்த சகோதரரான மீனாட்சிசுந்தரம் ஆகியோர் மைனராக இருந்ததால் தந்தையான கருப்பையா தேவர் என்பவரை கார்டியனாக காட்டி மேற்படியாரின் தாயாரான கணபதியம்மாள் என்பவர் தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் தாவா சொத்துக்களை பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளதாக கூறியுள்ளார்கள் என்றும்,

மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் தாவா சொத்துக்கள் 2, 5 ம் லக்கமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே கடந்த 07.06.1985ம் தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை பொறுத்து வாதி தரப்பில் Null andVoid பரிகாரம் கோர வேண்டி தனக்கு Legal Advice கிடைத்துள்ளது என்றும், எனவே தாவா மனுவை அனுமதியளித்து வழக்கினை மேல்நடத்திட உத்திரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரார் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் எதிர்மனுதாரர்களால் ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், மனுதாரரால் 26.06.2020ம் தேதியன்று சமூகம் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் 4வது லக்க ஆவணமாக 17.06.2020ம் தேதியில் தாவா சொத்துக்களுக்கான பட்டாவை தன் பெயருக்கு மாற்ற கோரி மானாமதுரை வட்டாட்சியரிடம் மனு கொடுக்கப்பட்டுள்ளதால், மனுதாரருக்கு 07.06.1985ம் தேதிய தான்செட்டில்மெண்ட் விபரம் மனு கொடுத்த தேதியிலேயே தெரியவந்துள்ளது என்றும், தாவா மனு தாக்கல் செய்துள்ள 09.12.2024ம் தேதி வரை 3 ஆண்டுகளை கடந்துவிட்டதால் காலவரையறை சட்டத்தின்படி மனுதாரர் கோரும் Null and Void பரிகாரமானது சட்ட காலங்களை கடந்துவிட்டது என்றும், தாவா சொத்துக்களில் 1963ம் வருடத்திய Limitation Act Sec.27ன் படி மனுதாரருக்கு வரக்கூடிய உரிமையும், Extinguishment Right of Property என்ற சட்ட நிலைப்பாட்டில் மனுதாரருக்கு இருந்து வரக்கூடிய உரிமையானது நீர்த்துபோய்விட்டது என்றும், தாவா மனுவானது Barred by Limitation ன் படி தள்ளுபடி செய்ய வேண்டியது என்றும் எதிருரை தாக்கல்.

4. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**5. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரர் தனது மனுவில் 07.06.1985ம் தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் பிரதிவாதிகள் மைனர்களாக இருந்த காரணத்தால் பிரதிவாதிகளின் தந்தையான கருப்பையா என்பவரை கார்டியனாக காட்டி கணபதியம்மாள் என்பவர் தானசெட்டில்மெண்ட் ஏற்படுத்தி கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், அதை செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரம் கோரி மனுதாரார் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளநிலையில், மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை இந்த வழக்கிலேயே செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்வதா? அல்லது வேண்டாமா? என்பதை இந்த வழக்கில் இந்நீதிமன்றம் முடிவு செய்தால் தான் இருதரப்பினருக்கிடையே வழக்குகள்

மேற்கொண்டு ஏற்படுவதை தடுக்கவும், உண்மைநிலையை கண்டறிந்து நீதியை நிலைநாட்டவும் மனுதாரார் கோரியுள்ள திருத்தம் அவசியம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

மேலும் அந்த ஆவணம் எதிர்மனுதாரர்கள் சொல்லியுள்ளதுபோல செல்லுபடி ஆகக்கூடிய ஆவணமா? அல்லது செல்லுபடி ஆகாத ஆவணமா? என்பதை இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 90ன்படி துணிவு (Presumption) கொள்ளலாமா? அல்லது வேண்டாமா? என்பதை வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் தான் முடிவு செய்ய இயலுமே தவிர, இந்நிலையில் முடிவு செய்ய ஏதுவாக இருக்காது.

மேலும் இவ்வழக்கில் Cause of Action 16.06.2020ம் தேதி ஏற்பட்டதாக வாதியின் வழக்கு அமைந்துள்ளநிலையில், அதையும் இவ்வழக்கு விசாரணையின்போது தான் முடிவு செய்ய இயலுமே தவிர இந்நிலையில் தீர்மானிக்க இயலாது. எனவே மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஏப்ரல் 05ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.05 17:43:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மானாமதுரை.

மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.05 17:43:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No. 2/2024**

**in**

**OS.No.54/2020**

**<u>Order</u>**

**05.04.2025**